செய்திப் பணிப்பாளர்/ செய்திப் பதிப்பாசிரியர் 21.03.2016

# செய்தி வெளியீடு

## தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் (அடிப்படை 2013=100) ; பெப்ரவரி 2016

### தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களம்
### தேசிய கொள்கை மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு

தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களம், 2016 பெப்ரவரிக்கான தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண்ணை வெளியிட்டுள்ளது. 2016 பெப்ரவரிக்கான தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண் 110.8 என கணிப்பிடப்பட்டுள்ளது. இது கடந்த மாத (ஜனவரி) சுட்டெண்ணான 112.0 உடன் ஒப்பிடுகையில் 1.2 சுட்டெண் புள்ளி மற்றும் 1.1 சதவீத வீழ்ச்சியைக் காட்டுகிறது. இது உணவுப் பொருட்களின் 1.22% பெறுமதி வீழ்ச்சியினாலும் மற்றும் உணவல்லாப் பொருட்களின் 0.11% பெறுமதி அதிகரிப்பினாலும் ஏற்பட்டதாகும்.

2016 பெப்ரவரியில், கடந்த மாதம் (ஜனவரி) உடன் ஒப்பிடும்போது மரக்கறி, அரிசி, பச்சை மிளகாய், பெரிய வெங்காயம், சின்ன வெங்காயம், உருளைக்கிழங்கு, தேசிக்காய், தேங்காய், தேங்காய் எண்ணெய் என்பவற்றின் விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியே உணவுப் பொருட்களின் பெறுமதி வீழ்ச்சிக்குக் காரணமாகும். எனினும் கருவாடு, உடன் மீன், பப்பாசி, சீனி, மாம்பழம், வெள்ளைப்பூடு என்பவற்றின் விலைகளில் கடந்த மாதம் (ஜனவரி) உடன் ஒப்பிடும்போது அதிகரிப்புக் காணப்படுகிறது.

ஜனவரி 2016 உடன் ஒப்பிடுகையில் 2016 பெப்ரவரிக்கான உணவல்லாப் பொருட்களின் பெறுமதி, 0.11% அதிகரிப்பினைக் காட்டுகிறது. இது பிரதானமாக உணவல்லாப் பொருட்களின் பிரிவில் ‘வீட்டு வசதிகள், நீர், மின், எரிவாயு மற்றும் ஏனைய எரிபொருள்’ அத்துடன் ‘நானாவிதப் பொருட்கள், சேவைகளினால் ஏற்பட்டதாகும். மேலும் ‘அற்ககோல் பானங்கள், புகையிலை மற்றும் போதைவஸ்து’, ‘தளபாடமும் வீட்டு உபகரணமும் வழமையான குடித்தனப் பராமரிப்பும்’, ‘சுகாதாரம்’ ஆகிய பிரிவுகளின் பெறுமதி மாற்றத்தில் சிறிதளவு அதிகரிப்புக் காணப்படுகிறது. எனினும் ‘உடையும் காலணியும்’, ‘போக்குவரத்து’ ஆகிய பிரிவுகளின் பெறுமதி மாற்றத்தில் சிறிதளவு வீழ்ச்சி காணப்படுகிறது.

தே.நு.வி.சு. அறிக்கை வெளியிடுகையில், தொகைமதிப்பு, புள்ளிவிபரப் பணிப்பாளர் நாயகம் கலாநிதி. அமர.சத்தரசிங்ஹ அவர்கள், 2016 பெப்ரவரிக்கான தே.நு.வி.சு. அடிப்படையான வருடத்திற்கு வருடம் பணவீக்கம் 1.7% ஆகவும் ஜனவரி 2016 இற்கான பணவீக்கம் -0.7% ஆக இருந்ததெனவும் தெரிவித்தார். 2016 பெப்ரவரியில் இந்த பணவீக்க சதவீத அதிகரிப்பிற்கான பிரதான காரணம், 2015 பெப்ரவரியில் அரசால் அமுலாக்கப்பட்ட இடைக்கால வரவு செலவுத் திட்ட முன்வைப்பில் சில அத்தியாவசிய உணவுப் பொருட்களான சமையல் வாயு, மண்ணெண்ணெய், பெற்றோல் மற்றும் பஸ் கட்டணத்தில் மீள் விலை குறைப்பு விளைவை நீக்கியமையாகும்.

தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட மிக அண்மைய நுகர்வோர் விலைச் சுட்டெண் தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண்ணாகும். 2015 ஒக்டோபரில் இருந்து தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களம், தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண்(அடிப்படை2013=100) இனை மாதாந்தம் 21 நாட்கள் இடைவெளியில் வெளியிடுகிறது.

தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்
தொ.இல.; 011-2147001/ 011-2147020